குமாரகிரி ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திரு.ஐ.ஜாக்சன் துரைமணி

ஊ.ம.ந.க.எண் : 03/2023-24 நாள் : 20.03.2024

பொருள் : மனைப்பிரிவு - தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் - குமாரகிரி ஊராட்சி/கிராமம் சர்வே எண் 255/3A1இல் (0.68 ஏக்கர்) 2753.00 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு மனைகளுக்கு நிபந்தனைக்குட்பட்டு மனைப்பிரிவு அனுமதி வழங்கி உத்தரவிடல்.

பார்வை :
1. அரசாணை எண் 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 04.05.2017.
2. தூத்துக்குடி நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் /துணை இயக்குநர் /உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் P616QN1E/THOOTHUKUDI/TC/2022/TCP நாள் 21.02.2023
3. ஆவண எண் 645/2023, 646/2023
4. குமாரகிரி ஊராட்சி தீர்மான எண் 11 நாள் 11.03.2024.

*****

உத்தரவு :

தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், குமாரகிரி ஊராட்சி/ கிராமம் சர்வே எண் 255/3A1இல் (0.68 ஏக்கர்) 2753.00 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு மனைகளுக்கு நிபந்தனைக்குட்பட்டு மனைப்பிரிவு அனுமதி வழங்கும்பொருட்டு, பார்வை (2)இல் காணும் கடிதத்தில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு SWP/DTCP/THOOTHUKUDI/LAYOUT NO: 11/2023 என எண்ணிடப்பட்டு, தூத்துக்குடி நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் / துணை இயக்குநர் / உதவி இயக்குநர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வை (3)இன் படி ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய சாலை மற்றும் பூங்காவுக்குரிய அசல் ஆவணங்கள் ஊராட்சியில் ஒப்படைக்கப்பட்டது. பார்வை (4)இல் கண்ட **ஊராட்சி தீர்மான எண் 11 நாள் 11.03.2024**இன் படியும் **ஊ.ம.அ.எண் 03/2023-24**இன்படியும் இணைப்பில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

இணைப்பு : அங்கீகரிக்கப்பட்ட வரைபடம்
மற்றும் நிபந்தனைகள்

ஊராட்சி மன்றத்தலைவர்
குமாரகிரி ஊராட்சி
தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர்

திருமதி.செல்வராணி,
7/38 , நாடார் தெரு
சிவகளை

நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

1. நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் /துணை இயக்குநர் /உதவி இயக்குநர்
   தூத்துக்குடி உள்ளூர் திட்டக் குழுமம்,தூத்துக்குடி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தூத்துக்குடி.
2. சார்பதிவாளர்,
   சார்பதிவாளர் அலுவலகம்,
   புதுக்கோட்டை
3. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
   தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம்
4. இருப்பு கோப்பிற்கு

Scanned with CamScanner

தமிழ்நாடு அரசு

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை

தூத்துக்குடி

மனைப்பிரிவு நிபந்தனைகள்

ஊ.ம.ந.க.எண் 03/2023-24 நாள் : 20.03.2024

நிபந்தனைகள்

1. அரசாணை எண் 255 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நாள் 18.08.1997இன்படி அரசாணையில் கண்ட நிபந்தனைகளை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும்.
2. நிலஉரிமை சம்பந்தமாக ஏதேனும் வில்லங்கங்கள் ஏற்பட்டால் எவ்வித நிபந்தனையுமின்றி மனைப்பிரிவு உத்தரவு ரத்து செய்யப்படும்.
3. சாலை மற்றும் ஓடையினை ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது
4. ஊராட்சிக்கு ஒதுக்கப்பட்ட 10 சதவீத இடத்தினை எவ்வித ஆக்கிரமிப்போ, இதர வகைக்கோ மனுதாரர் பயன்படுத்தக்கூடாது.
5. மனைப்பிரிவில் கட்டிடங்கள் கட்டும்போது அரசு விதிகளை தவறாது கடைப்பிடிக்க வேண்டும்.
6. தானப்பத்திரம் இடத்தில் உள்ள பலன்தரும் மரங்களை எவ்வித காரணம் கொண்டும் அகற்றக்கூடாது.
7. சாலை ஓரங்களில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள் எவ்வித தடங்கலும் ஏற்படுத்தக்கூடாது.
8. அனுமதிக்கப்பட்ட மனைப்பிரிவுகளை தவிர கூடுதலாக மனைப்பிரிவோ மாற்றமோ ஏற்படுத்தக்கூடாது.
9. சாலைகள் அனைத்தும் பொதுச்சாலையாக பயன்படுத்தப்பட வேண்டும். அருகில் உள்ள நில உரிமைதாரர்கள் இவ்வழியாக செல்ல தடை ஏற்படுத்தக்கூடாது.
10. மனைப்பிரிவில் ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட தெருக்களில் 100 அடிக்கு ஒரு மின்கம்பம் அமைத்து மனுதாரரின் செலவில் தெருவிளக்கு அமைப்பதற்கு மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது.
11. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதி தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
12. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டும் பயன்படுத்த வேண்டும்.
13. கோவில், தேவாலயம், மசூதி ஆகியவற்றிக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
14. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின் படி உள்ளாட்சி அலுவலர் வழங்கிய சான்றினை ஏற்று நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.
15. மேலும் நகர் ஊரமைப்புத்துறை இணை இயக்குநரில் நிபந்தனைகளை தவறாது கடைப்பிடிக்க வேண்டும்.
16. மேற்கண்ட நிபந்தனைகளை கடைப்பிடிக்க தவறும்பட்சத்தில் தங்களது அனுமதி எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படுவதுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஊராட்சி மன்றத்தலைவர்,
குமாரகிரி ஊராட்சி,
தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம்.

Scanned with CamScanner